


திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை அருங்காட்சியகம் திறப்பு விழா, மனிதநேய மகத்துவ கிறிஸ்துமஸ் பெருவிழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக தூத்துக்குடி விமான நிலையத்திற்கு நேற்று (20.12.2025) வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### நெல்லை மாவட்ட அரசு விழாவில் பங்கேற்க வருகை தந்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## தூத்துக்குடி விமானநிலையத்தில் அமைச்சர்கள் - கழகத்தினர் திரண்டனர்!

தூத்துக்குடி, டிச.21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் இன்று கள ஆய்வு மேற்கொள்கிறார். இதற்காக, சென்னையிலிருந்து தூத்துக்குடி வருகை தந்த முதலமைச்சருக்கு விமானநிலையத்தில் ஏராளமான தி.மு.க.வினர் வரவேற்பு அளித்தனர். அப்போது சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கீதா ஜீவன், தங்கம் தென்னரசு, அனிதா ராதாகிருஷ்ணன், ராஜ கண்ணப்பன் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா மார்க்கண்டேயன், ராஜா, இனிகோ இருதயராஜ், மேயர் ஜெகன் பெரியசாமி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் உள்ளிட்ட ஏராளமானோர் உற்சாக வரவேற்பளித்தனர்

பொதுமக்களின் அன்பால் நெகிழ்ச்சியடைந்த முதலமைச்சர் சாலையில் இறங்கி அவர்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டார். அப்போது, பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டோர் முதலமைச்சருடன் செல்ஃபி எடுத்தும், புகைப்படம் எடுத்தும் மகிழ்ந்தனர்.

பின்னர் மாலையில் நெல்லை மாநகர் டக்கரம்மாள்புரத்தில் நடைபெறும் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்றார். பொருநை அருங்காட்சியகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இன்று நெல்லை அரசு மருத்துத்துவக் கல்லூரி மைதானத்தில் நடக்கும் அரசு விழாவில் 44ஆயிரத்து 924 பயனாளிகளுக்கு 100 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்குவதுடன், காயிதேமில்லத் அறிவு நூலகம், மருத்துவக்கல்லூரி கூடுதல் கட்டடம் உள்பட 538 கோடியே 48 லட்சம் மதிப்பில் முடிவுற்ற திட்ட பணிகள் மற்றும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்க உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நெல்லை வருகையால் மாநகரம் முழுவதும் கொடி தோரணங்கள் கட்டப்பட்டு விழாகோலம் பூண்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.12.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற மக்களவை கழகக்குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் சந்தித்து, புது தில்லியில் நடைபெற்ற லோக்மத் நாடாளுமன்ற விருதுகள் 2025 வழங்கும் விழாவில், நாடாளுமன்றத்தில் சிறந்த முறையில் செயலாற்றி வருவதற்காக தனக்கு வழங்கப்பட்ட வாழ்நாள் சாதனையாளர் விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

### விடுபட்ட வாக்காளர்களைச் சேர்க்கும் வகையில்

# எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும்!

## “தி இந்து ஆங்கில நாளேடு” தலையங்கம்!

சென்னை, டிச.21-

நாடு முழுவதும் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் தீவிர திருத்ததில் பல கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் வகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும் என, “தி இந்து ஆங்கில நாளேடு” தலையங்கம் தீட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர்., பணிகள் முடிவடைந்த நிலையில், மாநிலம் முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதில், 97 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப் பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதேபோன்று, மேற்குவங்கம், கேரளா உள்ளிட்ட 7 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பல கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் தீவிர திருத்தத்தில் பல கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் வகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும் என, ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது. தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில்தான் அதிக அளவிலான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதன்படி, மேற்குவங்கத்தில் 7 புள்ளி 50 சதவீத வாக்களர்களும், தமிழ்நாட்டில் 15 சதவீதத்தினரும் நீக்கப்பட்டுள்ளனர்.

மேற்குவங்கத்தை பொறுத்தவரை நகர்ப்புறங்களில் அதிகளவிலான வாக்காளர்கள் நீக்கப் பட்டுள்ளதாகவும், குறிப்பாக, கொல்கத்தாவில் அதிக அளவிலான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள் ளதும்



THE HINDU

**Do not rush it**

The SIR requires more time to prevent mass exclusions

The Election Commission of India (ECI) has released the draft electoral roll for seven States and Union Territories after the first phase of the Special Intensive Revision (SIR) was completed with the submission of enumeration forms by eligible voters and their digitisation by Booth Level Officers (BLO). In Tamil Nadu and West Bengal, more than 97 lakh and 58 lakh voters, respectively, were deleted. These deletions

தெரியவந்துள்ளது. இதே போன்று, மேற்குவங்கத்தில் அதிக எண்ணிக்கையிலான கணக்கெடுப்புப் படிவங்கள் 2002 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலுடன் இணைக்கப்படாமல் உள்ளதாகவும், 1987ம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்களுக்கு பெற்றோரின் பிறப்பு விவரங்களுக் கான சான்றுகள், குடியுரிமை ஆவணங்களை தேர்தல் அதிகாரிகள் வலியுறுத்துவதால் எஸ்.ஐ. ஆர். பணிகளை மேற்கொள்வதில் தொடர்ந்து தாமதம் ஏற்படுவதாகவும் ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

மேற்குவங்கத்தில் குடியுரிமை ஆவணங்களை தேர்தல் பதிவு அதிகாரிகள் வலியுறுத்துவதால், 53 நாட்கள் கொண்ட குறுகிய கால அவகாசத்தில் வாக்காளர்கள் நீக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. பீகாரில், வாக்காளர்கள் ஆதார் அட்டையை ஒரு செல்லுபடியாகும் அடையாள ஆவணமாகப் பயன்படுத்த அனுமதிக்கலாம் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு, அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்களை நீக்குவதை தடுக்க உதவிய நிலையிலும் 68 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட தாகவும் கூறப்பட்டுள் ளது. இதன் மூலம், பீகாரில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர்கள் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் சரியாக இல்லை என்பதையே காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்தோர், எழுத்தறிவற்ற வாக்காளர்கள் மற்றும் திருமணமான பெண்கள் போன்றோர் எஸ்.ஐ.ஆர். பணி களின் மூலம் தங்களின் வாக்களிக்கும் உரிமையை இழக்கும் அபாயத்தில் உள்ளனர். கேரளாவில் எஸ்.ஐ.ஆர். பணிகள் நடைபெற்ற போது, உள்ளாட்சித்தேர்தல் பணிகளும் ஒரேநேரத்தில் நடைபெற்றதால் குறுகிய காலத்தில் வாக்காளர்கள் தங்களின் வாக்குரிமையை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எனவே, பல கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலை யில், விடுபட்ட வாக்காளர்களை சேர்க்கும் வகையில், எஸ்.ஐ.ஆர். பணிகளை மேலும் நீட்டிக்க வேண்டும் என, ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.

### விக்கிரவாண்டி தொகுதியில் – அன்னியூர் சிவா எம்,எல்,ஏ., முயற்சியில்

# அன்னியூரில் அரசு கலைக் கல்லூரி!

## அமைச்சர் கோவி,செழியன் – கட்டடப் பணிகளை ஆய்வு செய்தார்!

விக்கிரவாண்டி, டிச. 21-

விக்கிரவாண்டி அடுத்த அன்னியூரில் ‘டாக்டர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரியில் கட்டடம் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட இடத்தை உயர் கல்வி துறை அமைச்சர் கோவி செழியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து மாணவர்களிடையே கலந்துரையாடினார்.

பின், அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

உயர் கல்வியில் இந்தியாவில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது. உயர் கல்வியை ஊக்கப்படுத்த அறிவியல் ஆராய்ச்சி மாணவர்கள் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் முதல்வர் கோடி கணக்கில் நிதி களை வழங்கி வருகிறார். கடந்த ஆண்டுகளில் இதுவரை 37 கலைக் கல்லூரிகள் துவங்க உத்தரவிட்டுள்ளார். அதில் இந்த கல்வி ஆண்டில் 16 கலை அறிவியல் கல்லூரிகளை முதல்வர் சட்டசபையில் அறிவித்தார்.

இந்த ஆண்டு ஒரு கல்லூரிக்கு 260 முதல் 300 மாணவர்கள் வீதம் 16 கல்லூரிகளும் துவக்கி கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளார். அன்னியூரில் 5 பாடபிரிவுகளுடன் கல்லூரி துவங்கி சிறப்பாக செயல்படுகிறது.

முதல்வர் ஆணைப்படி துவக்கப்பட்டுள்ள அனைத்து கல்லூரிகளுக்கும் சென்று மாணவர்கள், ஆசிரியர்கள் கோரிக்கை, கட்டடம் கட்ட உள்ள இடங்கள் ஆகிய வற்றை பார்வையிட்டு வருகிறேன்.

இக்கல்லூரியில் மாணவர்களிடையே உரையாடிய போது மாலையில் போக்குவரத்து வசதி, கேன்டீன் வசதி வேண்டுமென கூறியுள்ளார்கள். மாணவர்களின் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றி தரப்படும்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியின் கூறினார்.

நிகழ்வில் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கவுதம் சிகாமணி, மண்டல இணை இயக்குனர் மலர், சேர்மன் ஜெயச்சந்திரன், தாசில்தார் செல்வமூர்த்தி, கல்லூரி முதல்வர் அசோகன், காணை ஒன்றிய சேர்மன் கலைச்செல்வி, ஒன்றிய செயலாளர்கள், ராஜா, ஜெயபால், ராஜ், முருகன், பொதுக் குழு உறுப்பினர் ஏழுமலை, ஒருங்கிணைப்பாளர் சுந்தர் உட்பட பலர் பங்கேற்றனர்.



சென்னைப் பெரியார்திடல் மணியம்மையார் அரங்கில் கவிஞர் கடவூர் மணிமாறன் எழுதிய தெற்கே முழங்கும் திராவிடம் என்னும் கவிதைத் தொகுப்பு , பேராசிரியர் மா செல்வராசன் தலைமையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் வெளியிட, பேராசிரியர் பொன் செல்வகணபதி பெற்றுக் கொள்கின்றார். அருகில் கடவூர் மணிமாறன் முனைவர் விபொபா தமிழ்ப்பாவை அறிவுக் கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொதுமக்கள் சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நகர்நலச் சங்க நிர்வாகிகளிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் மற்றும் அனைத்துத் துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட நகர்நலச் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.